**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2023 ம் வருடம் செப்டம்பர் திங்கள் 21 ம் நாள் வியாழகிழமை</u>

**<u>இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.276/2018</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி டவுன், பாலக்காடு ரோடு, எண்.85 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ராமசாமிகவுண்டர் மகன் திரு.R.நடராஜன் அவருக்காகபொது அதிகார முகவர்கள்

1) பொள்ளாச்சி டவுன், பல்லடம் ரோடு, S.R.லேயவுட், கதவு எண்.22/A என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 48 வயதுடைய திரு.காளியப்ப செட்டியார் மகன் திரு.K.காளை பழனியப்பன்.

2) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, நார்த் நக்ஸ்டன்சன், சிவசுப்பிரமணியபுரம் 7 வது தெரு, கதவு எண்.2405/5 என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 52 வயதுடைய திரு.S.S.ராஜமாணிக்கம் மகன் திரு.R.சேகர்.

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

ஆணையர், பொள்ளாச்சி நகராட்சி. ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்கள் தரப்பு ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 27.02.2023.

இம்மனுவானது கடந்த 20.09.2023 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி

தரப்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.T.மருதராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

**இறுதி உத்தரவு**

| |
|---|
| முடிவில், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலவுத் தொகையாக ரூ.750/-ஐ வரும் 10.10.2023 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ மனுதாரர்கள்/வாதிகள் செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும். அழைக்க: 10.10.2023. |

இவ்வுத்தரவு 2023ம் வருடம் செப்டம்பர் திங்கள் 29ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
இ.ம.எண்.03/2023 இன் அ.வ.எண்.276/2018
நாள் : 29.09.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---